## திருச்சிராப்பள்ளி மாவட்டம்

## பத்திரிக்கைச்செய்தி

## சிறுமி சந்தேக மரண வழக்கில் குற்றவாளி கைது செய்யப்பட்டது தொடர்பாக

திருச்சி மாவட்டம் சோமரசம்பேட்டை காவல்நிலைய சரகம் அதவத்தூர்பாளையம் கிராமத்தில் 14 வயது சிறுமி கடந்த 06-07-2020 ஆம் தேதி 12 மணியளவில் அவரது வீட்டின் அருகே உள்ள உறவினரின் மளிகை கடைக்கு பொருட்கள் எடுத்து வைக்க சென்றவர் திரும்ப வராததால், 1400 மணியளவில் சிறுமியின் அக்கா அவரது உறவினரிடம் சென்று சிறுமி குறித்து கேட்ட போது அவர் ஏற்கனவே சுமார் 1400 மணிக்கு வீட்டிற்கு செல்வதாக கூறி சென்றுவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. பின்னர் சிறுமியின் சகோதரி மற்றும் உறவினர்கள் அவரை தேடி பார்த்த போது சுமார் 1650 மணியளவில் அதவத்தூர்பாளையத்தில் அவரது வீட்டின் அருகில் உள்ள கருவேலங்காட்டில் சிறுமி உடல் எரிந்த நிலையில் இறந்து கிடந்துள்ளார். தகவல் அறிந்து துணைகாவல் கண்காணிப்பாளர், ஜீயபுரம் உட்கோட்டம் மற்றும் காவல் ஆய்வாளர் சோமரசம்பேட்டை ஆகியோர் சம்பவ இடம் சென்று விசாரணை மேற்கொண்டனர். சம்பவ இடத்திற்கு தடய அறிவியல் நிபுணர், விரல் ரேகை நிபுணர் மற்றும் மோப்பநாய் படைப்பிரிவு வரவழைக்கப்பட்டு தடயங்கள் உடனடியாக சேகரிக்கப்பட்டன. சம்பவம் தொடர்பாக சிறுமியின் தந்தை கொடுத்த புகாரின் பேரில் சோமரசம்பேட்டை காவல் நிலைய குற்ற எண்: 1026/20 u/s 174(iii) கு.வி.மு.ச படி வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கு தொடர்பாக மத்திய மண்டல காவல்துறை தலைவர் திரு.ஜெயராம் இ.கா.ப மற்றும் திருச்சி சரக காவல்துறை துணைத்தலைவர் திருமதி.ஆனிவிஜயா இ.கா.பா அவர்களின் உத்தரவின் பேரில் திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜியாவுல்ஹக் இ.கா.ப -வின் வழிகாட்டுதலின் பேரில் வழக்கின் விரைவான புலன்விசாரனைக்காக ஆறு தனிப்படைகள் அமைக்கப்பட்டு தீவிர புலன்விசாரனை மேற்கொள்ளப்பட்டதில் அதே ஊரை சேர்ந்த செந்தில்குமார், வயது 24 என்பவர் சிறுமியை தற்கொலைக்கு தூண்டியது கண்டறியப்பட்டது.